பாடம் 4

# வீட்டைச் சேருதல்

"எனக்கு 2 பொம்மைகள் இருக்கின்றன. உன்னிடம் பொம்மையே இல்லை; நீ பாவம்" என்ற பாடல் உனக்குத் தெரியுமா? ஆனால், ஒருவருக்கொருவர் பகிர்ந்துவாழுவதே மேலானது; இதை ஏசாவும், யாக்கோபும் ஒரு வழியாகப் புரிந்துகொண்டனர்.

தேவன் சொல்லிய பின்னரே யாக்கோபு தன் குடும்பத்தோடு பயணம் செய்யத் தொடங்கினார். ஆனாலும், தன் அண்ணனை வாலிப வயதில் ஏமாற்றியது நினைவுக்கு வந்தது. சேஷ்டபுத்திர பாகத்தையும், அண்ணனுக்குரிய ஆசீர்வாதத்தையும் அபகரித்துக்கொண்டதும் நினைவுக்கு வந்தது. எனவே பயந்தார். அண்ணன் ஏசாவுக்குத் தன்மேல் இன்னும் கோபம் இருக்குமோ என யாக்கோபு மிகவும் பயந்தார்.



தேவன் தனக்கு உதவுமாறு கெஞ்சினார். தேவன் தம் தூதர்களை கூடவே அனுபினார்.

வெள்ளாடுகள், செம்மறியாடுகள், ஒட்டகங்கள், காளைகள், கோவேறு கழுதைகள், கோவேறு கழுதைகுட்டிகள் போன்றவற்றையும் ஏசாவுக்கு வெகுமதியாகக் கொடுத்தனுப்பினார்.

தான் லாபானின் வீட்டிலே இருந்ததாகவும் தேவன் தன்னை ஆசீர்வதித்திருப்பதாகவும் ஏசாவிடம் சொல்ல வேலையாட்களை அனுப்பினார்.

யாக்கோபு அனுப்பிய

## மனன வசனம்

**தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்; வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு.**

**ஆதியாகமம் 33:11.**

வேலையாட்கள் ஏசாவைச் சந்தித்துப் பின்னர் யாக்கோபிடம் திரும்பி வந்தனர். அவர்கள் ''நீர் சொன்னபடியே, நாங்களும் ஏசாவிடம் சொன்னோம். ஏசாவும் 400 பேருடன் உம்மை எதிர்கொள்ள வருகிறார்'' என்றனர். தான் அனுப்பிய வேலையாட்கள் சொல்லிய பதிலைக் கேட்ட மாத்திரத்தில் யாக்கோபு பயந்து கலங்கினார்.

ஏசா வருகிறார் என்று கேள்விப்பட்டதே, மனதைக் கலங்கப்பண்ணிற்று; ஆனால், 400 பேருடன் எதிர்கொள்ள வருகிறான் என்பது உண்மையாகவே யாக்கோபின் மனதினுள் கலக்கத்தை ஏற்படுத்தியது.

எனவே, யாக்கோபும் ஞானமாகத் தன் அண்ணன் ஏசாவைச் சந்திக்க ஓர் ஏற்பாடு செய்தார். தானும் தன் குடும்பமும் அவரைப் பார்க்கவருவதாகச் சொல்லும்படிக்குத் தன் வேலையாட்களிடம் கேட்டுக்கொண்டான். அன்று இரவு தன் குடும்பத்தாரையும் கால்நடைகளையும் பத்திரமாக யாப்போக்கு என்னும் ஆற்றைக் கடக்கச்செய்தார். பின்னர் ஆற்றங்கரையில் தனித்திருந்து ஜெபித்தார்.

தேவன் அங்கே யாக்கோபைச் சந்தித்தார். அன்று இரவு முழுவதும் தேவனுடன் போராடினார். கடைசியில் தேவன் அவனை ஆசீர்வதித்தார். யாக்கோபுக்கு 'இஸ்ரவேல்' என்னும் புதுப்பெயரைக் கொடுத்தார்.

தேவகிருபையால் ஏசாவும் யாக்கோபை ஒன்றும் செய்ய முற்படவில்லை. மறுநாள் 400 பேருடன் ஏசாவும், குடும்பத்தாருடன் யாக்கோபும் ஒருவரையொருவர் சந்தித்தனர். யாக்கோபுடைய மனைவிகளும், பிள்ளைகளும் வேலைக்காரிகளும்ஏசாவைப் பணிந்து வணங்கினார்கள்.



## செய்தி

**தேவன் தந்த ஆசீர்வாதங்களைப் பிறருக்குப் பகிரும்போது நாம் தேவனுக்குச் சேவைசெய்கிறோம்.**

பின் ஏசாவும் யாக்கோபும் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டு வெகுநேரம் அழுதனர். ‘‘தேவன் எனக்குத் தந்தவர்கள்’’ என்று அவர்களை அறிமுகம் செய்தார் யாக்கோபு. ஏசாஅதைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தான். ‘‘நானும் உன்னுடன் துணையாக வரட்டுமா?’’ என ஏசா கேட்டபோது யாக்கோபு மிகவும் அழகாகப் பேசி அதை மறுத்தார். மேலும், தேவன் தனக்குப் பெரிய பாதுகாப்பாக இருப்பதாகவும் கூறினார். அதன்பின் ஏசா ஊருக்குச் சென்றான். யாக்கோபு கானானிலுள்ள சீகேமுக்குச் சென்று அங்கே தன் குடும்பத்துடன் தங்கினார். அதன்பின் 20 வருடம் கழித்து இன்னும் பெரிய பணக்காரர் ஆனார்.

அன்பே, தேவனுக்கு பயந்து வாழ்ந்தால் ஆசீர்வாதம்.

**செய்முறை:**

தேவனைப் பற்றி யாக்கோபு உயர்வாகச் சொல்லிய இன்றைய மனப்பாட வசனத்தின் ஒரு பகுதி கட்டத்தினுள் சிதறிக்கிடக்கிறது. அவ்வார்த்தைகளைக் கண்டுபிடித்து

## புதிர் 4

